## சுருக்கம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் – நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு – பரிந்துரைகள் மேலும் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் அளித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை(நிலை) எண்.61 நாள்: 11.04.2008.

படிக்கப்பட்டது:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை(நிலை) எண்.6, நாள் 21.01.2007.

---

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க உயர்நிலைக்குழுவினை அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இக்குழு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளது.

2. இந்திய அரசமைப்பு 74–வது திருத்தச் சட்டத்திற்கேற்ப, அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 18 பொருட்களையும் உள்ளடக்கிய பொருள்களில் பொறுப்புகளும் அதிகாரங்களும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது தொடர்பாக 1994–ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சி சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசு அமைத்த பணிக்குழு, மாநகராட்சிகள் / நகராட்சிகள் ஏற்று நடத்த வேண்டிய பொறுப்புகள் குறித்த ஏடு ஒன்றினைத் தயாரித்து, மாநில அரசுகளின் பரிசீலனைக்குப் பரிந்துரைத்துள்ளது. இவற்றை பரிசீலித்த உயர்நிலைக்குழு, இது பற்றிய தனது பரிந்துரையை அரசுக்கு வழங்கியுள்ளது. இந்தப் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்து அவற்றை ஏற்கலாம் என முடிவெடுத்துள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காணுமாறு ஆணையிடுகிறது:

1) ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பும், நகரின் தொழில் வளர்ச்சி, அதிகரித்து வரும் மக்கள் தொகை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, நகரின் திட்டமிட்ட வளர்ச்சி, கட்டமைப்பு வசதிகளின் தேவை, சமூக, பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய நகர வளர்ச்சிக்கான 15 வருட தொலைநோக்கு திட்டம் ஒன்றினையும், வளர்ச்சிப் பணிகளுக்கான 5 வருட முதலீட்டு மேம்பாட்டுத் திட்டத்தினையும் தயாரிக்க வேண்டும். இத்திட்டங்களின் அடிப்படையில் ஆண்டு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

2) ஒவ்வொரு வார்டிலும் மற்றும் நகர அளவிலும் அமைந்துள்ள பொருளாதார ஆதாரங்கள், கட்டமைப்பு வசதிகள், அடிப்படை சேவைகள் மற்றும் சமூக தேவைகள் தொடர்பான விவரங்களை சேகரித்து, அவற்றை ஆராய்ந்து, மனிதவளம் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கென வார்டு மற்றும் நகர அளவிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கான திட்டத்தினை இரண்டாண்டுக்கு ஒருமுறை தயாரிக்க வேண்டும். இத்திட்டத்தின் மீது மன்றத்தின் ஒப்புதலைப் பெற்று தேவையான நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்த வேண்டும்.

3) வார்டுகளை திட்டமிடும் அலகுகளாகக் கொண்டு நகர மற்றும் மண்டல அளவிலான முழுமைத் திட்டங்களை (Master Plans) ஐந்தாண்டுக்கொருமுறை தயாரிக்க வேண்டும். மேலும், இதன் அடிப்படையில் நிலப்பயன்பாடு மற்றும் அடிப்படை சேவைகளுக்கான ஆண்டு வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்க வேண்டும்,

4) நகரின் சீரான மற்றும் திட்டமிட்ட அமைப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு பகுதி அளவிலும், நகர அளவிலும் கிடைக்கக்கூடிய நிலங்களின் பயன்பாட்டையும், மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களையும், வழங்கப்படும் அடிப்படை வசதிகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும். இதற்கென, நிலப்பயன்பாடு மற்றும் கட்டுமானங்கள் தொடர்பாக, நடைமுறையிலுள்ள சட்ட வரைமுறைகள், விதிகள், ஆணைகள் மற்றும் அறிவுரைகளை வழுவாது பின்பற்ற வேண்டும்.

5) நகர்ப்புர வறுமை ஒழிப்பு மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் தொடர்பான அனைத்துப் பணிகளுக்கும் பயனாளிகளை தேர்வு செய்வதற்கான அடிப்படை கூறான, வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்கள் பட்டியலை, நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளின் அடிப்படையிலும், வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையிலும் எவ்வித குறைபாடுகளுமின்றி தயாரித்தல் வேண்டும்.

6) ஒவ்வொரு வார்டு மற்றும் நகர அளவில் சாலைகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், நடைபாதை, பாலங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்த புள்ளிவிவரத் தொகுப்பை ஆண்டுக்கு ஒருமுறை தயாரிக்க வேண்டும். கட்டமைப்பு வசதிகள் குறித்த தற்போதைய நிலை, நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் நிதிநிலைமை, நிதி ஆதாரங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வுகளின்றி நகரத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், சீரான வளர்ச்சியினை உறுதி செய்வதற்கும் ஏற்ற வகையில், செயல்படுத்தப்படவுள்ள, திட்டங்கள், பணிகளுக்கான முன்னுரிமைகளை நிர்ணயிக்க வேண்டும்.

7) நகர்மன்றத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும், அச்சொத்துக்களை பயன்படுத்துவோரின் வசதிகளை மேம்படுத்துவதற்கும், அச்சொத்துக்களிலிருந்து பெறப்படும் வருவாயை அதிகரிப்பதற்கும் ஏதுவாக வரையறைகளின் அடிப்படையில், ஐந்தாண்டு சொத்து பராமரிப்புத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். இதற்கென தேவையான நிதியை ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

.3..

8) சொந்த அல்லது தகுந்த தொழில்நுட்ப அமைப்பின் ஆலோசனைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகளின்படி, நகர மக்களுக்கு தேவையான பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீரை வழங்குவதற்கு தேவையான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதன் ஒரு பகுதியாக நகர்மன்றங்கள் ஒவ்வொரு ஆண்டும் நகர மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளின் அளவுகள் மற்றும் வரையறைகள் குறித்தும் அவைகள் எந்த அளவிற்கு எட்டப்பட்டுள்ளது என்பது குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை ஒன்றினை மன்றத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் சமர்பிக்க வேண்டும்.

9) நகர மக்களுக்கு தேவையான குடிநீர் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, குடிநீர் திட்டங்களின் பராமரிப்பு, மேம்பாட்டுப் பணிகள், புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவது ஆகியவற்றிற்கு தேவையான வருமானத்தை உறுதி செய்யும் பொருட்டு குடிநீர் திட்ட பராமரிப்புச் செலவு, திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய ஆண்டுக் கடன் தொகை மற்றும் வட்டி ஆகியவற்றின் அடிப்படையில் குடிநீர் விலை நிர்ணய கொள்கையினை தயாரிக்க வேண்டும் மற்றும் அதனடிப்படையில் குடிநீர் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

10) நகரின் தூய்மை, துப்புரவு, சுகாதாரம், நகர் மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு நகரின் பொது சுகாதாரம், துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பொதுமக்களின் தேவைகளைக் கண்டறிய ஆண்டுக்கொருமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ள தேவைகளை நிறைவேற்ற நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டு வருதல் வேண்டும். நகர்ப்புறத் தூய்மையை உறுதி செய்வதற்கென அறிவியல் முறையிலான திடக்கழிவு மேலாண்மையை கட்டாயம் பின்பற்றப்படுதல் வேண்டும். திடக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக பிரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இம்முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

11) நகரின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டமிடுதல் மற்றும் செயல்பாடுகளுக்கென, நகர மக்களின் சமூக பொருளாதார நிலை குறித்த புள்ளி விவர தொகுப்பினை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தயாரித்து மன்றத்தின் ஒப்புதலோடு அதிகாரப்பூர்வமாக வெளியிட வேண்டும்.

12) குடிசைப்பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அப்பகுதிகளின் தேவைகளைக் கண்டறிய உரிய ஆய்வுகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய செயலாக்கத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். மேலும், இச்செயலாக்கத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, ஒவ்வொரு நகரமும் தங்களது நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 25 விழுக்காட்டு நிதியினை இதற்காகவே ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

.4..

13) குடிசைப் பகுதிகளில் போதுமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் அதே வேளையில், அரசு, அரசு நிறுவனங்களுக்கு சொந்தமான மற்றும் பிற பொது இடங்களை ஆக்கிரமித்து நகரின் திட்டமிட்ட வளர்ச்சி, தூய்மை, சுகாதாரம் ஆகியவற்றிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அனுமதியற்ற புதிய குடிசைப் பகுதிகள் உருவாவதை தடுக்க, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், கண்காணிப்பு உள்ளிட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

14) நகர்ப்புற வறுமையை ஒழிக்கவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை, அரசு துறைகள், பிற நிறுவனங்களின் முழு ஒத்துழைப்பை பெற்று, நகர்ப்புறங்களில், முனைப்புடன் செயல்படுத்துதல் வேண்டும்.

15) நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களை செம்மையாக செயல்படுத்த, திட்டப் பயனாளிகளை சரியாக கண்டறிதல், தேவையான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

16) நகரின் தூய்மை, அழகுணர்வு மேம்படும் வகையிலும், மக்களின் ஆரோக்கியம் மற்றும் பொழுதுபோக்கிற்கெனவும் பூங்காக்களை அமைக்க வேண்டும். பூங்காக்கள் மக்களுக்கு முழுமையாக பயனளிக்கும் வகையில் தக்க இடங்களை தேர்வு செய்து, அமைத்து, தக்கபடி பராமரிக்க வேண்டும். மேலும், இது போன்று தனியார் மற்றும் நகரில் அமைந்துள்ள தொழில் மற்றும் வணிக நிறுவனங்களின் பங்களிப்போடு பூங்காக்கள் அமைக்கும் மற்றும் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

17) மற்றும் 18) இடுகாடு, சுடுகாடுகளில், நவீன எரிவாயு / மின் மயானங்கள்/ தகன மேடைகள் அமைத்தல், முறையான அணுகுப் பாதைகள் / சாலைகள் (approach roads) அமைத்தல், தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்துதல், சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்தல், மரங்கள் வளர்த்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பணிகளில் தொண்டு நிறுவனங்கள் / தனியார் பங்களிப்பினை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

19) நகர்ப்புற மக்களின் ஆரோக்கியம், நகரின் சுற்றுச் சூழல் மேம்பாடு ஆகியவற்றை கருத்திற்கொண்டு நவீன, சுகாதாரமான ஆட்டிறைச்சி கூடங்களை அமைத்து, அவைகளை முறையாகப் பராமரிக்க வேண்டும்.

3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் அவற்றின்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, மேற்படி பொறுப்புகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உரிய முறையில் செயல்படுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேற்படி பொறுப்புகளை செவ்வனே செயல்படுத்தத் தேவையான கூடுதல் வழிகாட்டுதல்களையும், நெறிமுறைகளையும் துறைத்தலைவர்கள் வழங்குவர். மேலும், இவ்வரசாணையில் உள்ள ஆணைகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சரிவர கடைபிடிப்பதை துறைத்தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும். இது குறித்த அரையாண்டு அறிக்கை ஒன்றினை அரசுக்கு துறைத்தலைவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் அனுப்பிட வேண்டும்.

5. இந்த அரசாணை, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பார்வைக்கு அவற்றின் அடுத்தக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

கே. தனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை – 600 108.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் வழியாக)

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அனைத்துப் பிரிவுகள் (தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.